# அன்னை உம்மு ஸல்மா ரழியல்லாஹு அன்ஹா



அன்னை ஹப்ஸா ரலியல்லாஹு அன்ஹா அவர்களின் புனித அடக்கஸ்தலம் - ஜன்னத்துல் பகீ:, மதீனா

இவர்களின் பெயர் ஹிந்த் என்பதாகும். உம்மு ஸல்மா என்பது காரணப் பெயர். இவர்கள் குறைஷி வம்சத்தவர்கள். அபூ உமையா என்பவர் இவர்களின் தந்தை. இவர்களின் முதற் கணவர் அபூ ஸல்மா என அழைக்கப்பட்ட அப்துல்லாஹ் பின் அப்துல் அஸத் என்பவராவர். நபித்துவத்தின் ஆரம்பகாலத்திலேயே தன் மகளாருடன் இஸ்லாமை ஏற்றார்கள். ஹபஷா, மதீனா ஆகிய இரு ஹிஜ்ரத்திலும் தங்கள் கணவருடன் பங்கு பற்றினார்கள். மதீனாவுக்கு ஹிஜ்ரத்துச் செய்த பெண்களில் இவர்களே முதன்மையானவர். உஹத் யுத்தத்தில் பட்ட காயத்தின் காரணமாக அபூஸல்மா (ரலியல்லாஹு அன்ஹா) உயிர்துறந்தார். அதன் அனாதைத்தனமும், ஏழ்மையும் ஹஸ்ரத் உம்மு ஸல்மா (ரலியல்லாஹு அன்ஹா) அவர்களை வதைத்து

துன்புறுத்தின. இந்நிலையில் கண்மணி நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அன்னவர்களை திருமணம் புரிந்தார்கள். ஹஸ்ரத் உம்மு ஸல்மா (ரலியல்லாஹு அன்ஹா) மிகவும் வெட்கமுள்ளவர். பொறுமையுள்ளவர். அகழி யுத்தத்தின் போதும் கைபர் யுத்தத்தின் போதும் இவர்கள் பிரசன்னமாயிருந்தார்கள். ஹுதைபிய்யா உடன்படிக்கையின் போது தோழர்களின் மனநிலையை அறிந்து சில நற்புத்திகளும் கூறி நிலைமையை ஒழுங்குபண்ணினார்கள். கண்மணி நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அன்னவர்களால் இவர்களுக்கு பிள்ளைகள் பிறக்கவில்லை. இவர்கள் தாராள மனப்பான்மையுள்ளவர்கள். கூரிய புத்தியுடையவர்கள். கடல்போன்று ஞானம் நிறைந்தவர்கள். தாபிஈன்களுக்குப் பெரிய ஆசானாய் இருந்திருக்கிறார்கள். ஹதீஸ்களை இவர்கள் எடுத்துக் கூறியிருக்கிறார்கள். இவர்கள் ஹிஜ்ரத் 63 ஆம் ஆண்டில் தங்களின் 84 ஆம் ஆண்டில் இறையடி சேர்ந்தார்கள்.




மேலும் பல இஸ்லாமிய பெரியார்களின் சரிதைகளை, எங்கள் இணையத்தளத்தில் வாசியுங்கள்:

www.mailofislam.com